
# உடன்பிறப்பே... 81

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கே.வி.சுப்பையா அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**



ஓவியம் : ரவி பேலட்

# கே.வி.சுப்பையா கழகம் வளர்த்த காவலர்!

‘தேர் என்றாலே திருவாரூர்’ என்று சொல்லும் அளவுக்கு, திருவாரூர் தேர் உலகப் புகழ் பெற்றது. ஆசியாவிலேயே அளவில் பெரிய தேர் என்பதும், அந்தத் தேர் 1926-ஆம் ஆண்டுத் தீயில் எரிந்து, பின்னர் புதிய தேர் கட்டப்பட்டு, 1948-ஆம் ஆண்டு வரை ஓடியதும், பின்னர் 22 ஆண்டுகள் ஓடாமல் நிறுத்தி வைக்கப்பட்டதும் திருவாரூர் தேரின் வரலாறு. அந்த வரலாற்றினைப் புதுப்பித்து 1970-ஆம் ஆண்டில் தேர் நகர வழி வகை செய்தார் அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர்.

கலைஞரின் வழிகாட்டுதலைக் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்படுத்திக் காட்டி, கலைஞரின் புகழ் மகுடத்தில் தேரும் ஒளிர, வழி செய்தவர் அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் கே.வி.சுப்பையா. சுருக்கமாக கே.வி.எஸ். என்று அழைக்கப்பட்ட அண்ணாவின் அன்புத் தம்பிகளில் ஒருவர், முத்தமிழறிஞர் கலைஞரின் நட்பு உடன்பிறப்பு.

அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், இன்றைய புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகில் உள்ள மேலக்கரும்பிரான் கோட்டையைச் சேர்ந்தவர். 1920-ஆம் ஆண்டு, மே மாதம் 11-ஆம் தேதி பிறந்தவர். தந்தையர் பெயர் வெள்ளைச்சாமி, தாயார் பெயர் மாகாளி அம்மாள்.

விவசாயக் குடும்பப் பின்புலம் என்றாலும், அன்றைய காலகட்டத்திலேயே பி.ஏ. பட்டம் பெற்றவர். ஆலங்குடியில் தொடக்கக் கல்வியும், பின்னர் புதுக்கோட்டை பிருஹதம்பாள் உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார். புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியிலும், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றவர்.

கல்லூரிக்குப் படிக்க வந்த காலத்திலேயே, திராவிட இயக்கக் கொள்கைகளில் ஆழங்காற்பட்ட சுப்பையா, தீவிரமாகக் களப்பணியாற்றத் தொடங்கினார். அதே நேரத்தில், அரசுப் பணியாக வருவாய்த் துறையில் பணியாற்றும் வாய்ப்பும் ஏற்பட்டது. அரசுப் பணியில் இருந்துகொண்டே, ஆலங்குடி பகுதிகளில் கழகக் கொடிகளை முதன்முதலில் பறக்க விட்டவர் சுப்பையா.

## அரசுப் பணியைத் துறந்து

1957-ஆம் ஆண்டு கழகம் முதன்முதலில் தேர்தலில் நிற்க முடிவெடுத்தது. அப்போது, “ஜனநாயகக் கடமையாற்றும் வீரர்கள், தேர்தலில் போட்டியிடும் கழக அபேட்சகர்கள்” எனப் பேரறிஞர் அண்ணா அறிவித்த பட்டியலில், ஆலங்குடி தொகுதிக்கு அறிவிக்கப்பட்டவர் கே.வி. சுப்பையா. தீவிர களப்பணி மற்றும் கழகத்தின் தேர்தல் பணிக்காகத் தனது அரசுப் பதவியைத் துறந்தவர். அந்தத் தேர்தலில் வெற்றிபெறவில்லை என்றாலும், அவரது கழகப் பணி தேங்கிவிடவில்லை. அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில், கழக முன்னோடிகள் அன்பிலார் போன்றோருடன் இணைந்து அரசியல் செய்தவர். திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராகச் செயல்பட்டு, அண்ணாவின் அன்பைப் பெற்றவர் சுப்பையா.

கழகம் அறிவித்த அத்தனை போராட்டங்களிலும் சிறைபட்டவர். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் 45 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர். விலைவாசி உயர்வுப் போராட்டத்தின்போது புதுக்கோட்டைப் பகுதிகளில் கழக முன்னோடிகளுடன் இணைந்து தீவிரமாகப் பிரச்சாரங்களைச் செய்தவர்.

1967-ஆம் ஆண்டு தேர்தலின்போது ஆலங்குடி தொகுதியில் கழகத்தின் வேட்பாளராக சுப்பையாவை நிற்க வைத்தார் அண்ணா. அந்த வெற்றியுடன் அண்ணாவைச் சந்தித்து வாழ்த்துப் பெற்று, அவரது அவையில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், கலைஞர் அமைத்த முதல் அமைச்சரவையில் அறநிலையத்துறை மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். அந்தப் பொறுப்பின்போதுதான், திருவாரூர் மக்கள் கலைஞரிடம் வைத்த கோரிக்கையை ஏற்று, திருவாரூர் தேர் செப்பனிட முடிவு செய்யப்பட்டது. அந்தப் பணியை அறநிலையத் துறை சார்பில், முன்னின்று நடத்தியதுடன், அப்போதே அந்தத் தேருக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தியவர் சுப்பையா அவர்கள்.

## கழகக் கட்டுப்பாடு

1975-ஆம் ஆண்டு, நெருக்கடி நிலை, இந்தியா முழுவதும் கொண்டு வரப்பட்டபோது, அதற்கு எதிராக, தமிழ்நாடு முழுவதும் மாவட்டக் கழக மாநாடுகளை நடத்தி, கருத்துரிமைக்குக் குரல் கொடுத்தார் கலைஞர்.

**புதுக்கோட்டையைக் கழகக் கோட்டையாக மாற்றிய காவலர்களில் கே.வி.சுப்பையா என்றென்றைக்கும் நினைவில் நிற்பார்.**

அந்த ஆண்டு அக்டோபர் 11 மற்றும் 12-ஆம் தேதிகளில் புதுக்கோட்டை மாவட்டக் கழக முதல் மாநாடு அறந்தாங்கியில் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டின் நிதிக்குழுவில் செயல்பட்டவர் கே.வி.சுப்பையா.

புதுக்கோட்டை மாவட்டம் பிரிக்கப்பட்டபோது, கூட்டுறவுத் துறைச் செயல்பாடுகளில் ஈடுபாடு காட்டியவர். குறிப்பாக, மாவட்டக் கழகத் தேர்தலின்போது, கழகக் கட்டுப்பாடுடன் பெரியண்ணன் அவர்களை மாவட்டச் செயலாளராகத் தேர்வு செய்வதில் கண்ணியம் காட்டியவர் என்கிற வரலாற்றுக் குறிப்பு கொண்டவர்.

## கழகத்தின் வெற்றி

1971-ஆம் ஆண்டு தேர்தலில், வேட்பாளர்களின் தேர்வுப் பட்டியலை, இறுதி செய்த கலைஞர், ஆலங்குடி தொகுதிக்கு, சுப்பையாவை மீண்டும் களம் இறக்கினார். அந்த நம்பிக்கையை வெற்றிக் கனியாக, கலைஞரிடம் கொண்டு வந்தார். கழகத்தினருக்கு வழிகாட்டியாக, அனைத்து சமூக மக்களையும் அரவணைத்துச் சென்றவராக இருந்தவர் என்பதால்தான், ஆலங்குடி தொகுதியில் தொடர்ச்சியாகக் கழகத்தின் வெற்றி சாத்தியமானது.

குறிப்பாக, அந்தக் காலகட்டத்தில் ஆலங்குடி, நெடுவாசல், பேராவூரணி,கறம்பக்குடி எனப் பகுதிக் கழகங்களில் இவர் கால் படாத கிராமங்களே இல்லை எனலாம். 1971-ஆம் ஆண்டு, பட்டுக்கோட்டை அருகே உள்ள பழஞ்சூர் என்கிற கிராமத்தில் அறநிலையத்துறை சார்பில், கல்யாண மண்டபம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தவர் சுப்பையா என்கிறது ஒரு கல்வெட்டுக் குறிப்பு.

களப்பணியாளராக, சுப்பையா அவர்களின் இறப்பு என்பது கழகத்தின் துயரமான காலகட்டத்தில்தான் நிகழ்ந்தது. கழகத்தின் ஒவ்வொருவருக்கும் அவர்களே ஆறுதல் என்கிற நிலையாக இருந்த மிசா நெருக்கடியில் உடல்நலம் பாதிக்கப்பட்டார். அந்த நிலையில், 30.10.1976 அன்று கே.வி.சுப்பையா அவர்கள் தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார்.

2020-ஆம் ஆண்டில், தமிழகம் மீட்போம் எனக் கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்தபோது, புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில், ‘கழகம் வளர்த்த காவலர்கள்’ என ஆலங்குடி கே.வி. சுப்பையா, காடுவெட்டி தியாகராஜன், புதுக்கோட்டை வீரையா, பெரியண்ணன், மஜீத், கீரை.தமிழ்ச்செல்வன் என மூத்த முன்னோடிகளை நினைவுகூர்ந்து இன்றைய கழகத்தினருக்கு உணர்வுபூர்வமான பாடம் எடுத்தார். புதுக்கோட்டையைக் கழகக் கோட்டையாக மாற்றிய காவலர்களில் கே.வி.சுப்பையா என்றென்றைக்கும் நினைவில் நிற்பார்.

...துடிக்கும்

## “நீங்கள் நினைக்கப்படுவீர்கள் சந்திரசூட்!“

“நீங்கள் நினைக்கப்படுவீர்கள் சந்திரசூட்” என்று வினோத்குமார் சந்த் என்பவர் எழுதிய பதிவு ஒன்று, சமூக வலைத்தளங்களில் சுற்றி வந்தது. அவர் யாரென்று தெரியவில்லையென்றாலும், அவரது மதிப்பீடு துல்லியமாக இருக்கிறது என்பதால், அதை தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார், பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, பின்வரும் காரணங்களுக்காக நினைக்கப்படுவார் என்று தொடங்குகிறது அந்தப் பதிவு,

“சக நீதிபதிகளுடன் சேர்ந்து, ராமர் கோவில் தீர்ப்பை எழுதிவிட்டு, அதன் கீழ் கையொப்பமிடும் துணிச்சல் இல்லாதவர் என்பதற்காக; தேர்தல் பத்திரம் சட்டவிரோதமானது என்று கூறிய பின்னர், பத்திரம் மூலம் பெறப்பட்ட பணத்தைத் திரும்ப வசூலிப்பதையோ அல்லது அதில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதையோ உறுதி செய்யாதவர் என்பதற்காக நீங்கள் நினைவுகூரப்படுவீர்”என நீள்கிறது. சண்டீகர் நகர மேயர் தேர்தல், மகாராஷ்டிரா ஷிண்டே/ஃபட்னாவிஸ்/அஜித் பவார் அரசு தொடர வழி செய்தது,

ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டில் அதானி நிறுவனத்திற்கு நன்னடத்தைச் சான்றிதழ் வழங்கியதற்காக, காஷ்மீர் சிறப்புரிமை ரத்து செய்த வழக்கை இழுத்தடித்து விசித்திரமான நிலைக்கு இட்டுச் சென்றது என, பல வழக்குகளிலும் சந்திரசூட் அவர்களின் நிலையைச் சுட்டிக்காட்டி இருக்கிறார். பணி ஓய்வுபெறும் நேரத்தில், இவைதான் அவர் விட்டுச் செல்லும் பாரம்பரியங்கள். ஆம், அவர் ஒரு நூலைக் கையில் பிடித்துக் கொண்டு, கண்களைத் திறந்திருக்கும் நீதிதேவதையின் சிலையை, இறுதியில் திறந்து வைத்திருக்கிறார்.

ஆயினும், ஆதாரத்தின் அடிப்படையில் நீதி வழங்காமல், தனக்கு சரியான பாதையைக் காட்டுவாரென அவர் நம்பிய கடவுளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர் செய்த பிரார்த்தனையின் அடிப்படையில், நீதி வழங்கியதன் மூலம் அவர் அரசியலமைப்புச் சட்டத்தின் எழுத்துக்கள் மற்றும் உணர்விற்கு மரியாதை அளிக்கவில்லை. தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அவர்களே, நீங்கள் இவை அனைத்திற்காகவும், ஏமாற்றும் நோக்கில் செயல்பட்டீர்கள் என்பதற்காகவும் நீங்கள் நினைக்கப்படுவீர்கள்!

பின் குறிப்பு: “நீங்கள் ஒரு தனிப்பட்ட சடங்கில் புகைப்படக்காரர்கள் புடைசூழ பிரதமருடன் சேர்ந்து பூஜை செய்தீர்கள் என்பதற்காகவும் நினைக்கப்படுவீர்கள்” என்கிற அந்தப் பதிவு ஆயிரக்கணக்கில் பகிரப்பட்டு வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்



### நேர்காணல் நேரம்...



சி.எம்.மதியழகன்

2006-ஆம் ஆண்டு தேர்தல் அறிவிப்பின்போது, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்குப் போட்டியிட விண்ணப்பம் செய்திருந்தேன். முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், இன்றைய கழகப் பொதுச் செயலாளர் ஆகியோர் நேர்காணல் செய்தனர். முத்தமிழறிஞர் கலைஞர் கேள்வி கேட்க, நான் பதில் சொன்ன அந்த நிமிடங்கள், என் வாழ்நாளில் மறக்கமுடியாத பொக்கிஷத் தருணமாக என்றும் நினைவில் நிற்கிறது.

**– சி.எம்.மதியழகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், தூத்துக்குடி வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in


## கருவூலம்

### மறைமுகத் திணிப்புக்குக் கண்டனம்!

1958-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் கோவை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டுத் தீர்மானங்களில், ‘இந்தித் திணிப்பு நீடித்தால்...’ எனும் கண்டனத் தீர்மானமும் ஒன்று. இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதில்லை என்று கூறிக்கொண்டே வானொலி, அஞ்சல் போன்ற துறைகளில் இந்தியை மறைமுகமாகத் திணித்து வரும் அரசியல் போக்கை, மாநாடு கண்டித்தது. தொடர்ந்து, இங்ஙனமே இந்தித் திணிப்பு நடந்து கொண்டிருந்தால், தென்னகம் பொறுத்துக் கொண்டிருக்காது, என்றும் மாநாடு கண்டனம் தெரிவித்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 641

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131